hon. Member that we are taking every step to provide adequate facilities for food and other snacks service on the way. We are taking the passengers to rest places and then providing them with amenities.

SRI A. A. RASHEED : May I know whether there is any proposal to air-condition these express buses?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, that is my dream. I would like to have all the long distance buses in the State air-conditioned. But I gather from some of the people who are working these air-condition buses that the cost is prohibitive. According to me, it should not cost more than Rs. 75,000 per bus including the chassis, the body and the air-conditioning plant. Since there are not competitive tenders for that sort of thing, it may have to wait.

SRI B. K. LINGA GOWDER : Is there any proposal to extend the service from Salem to Ootacamund?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot answer about all the proposals.

MR. SPEAKER : If every hon. Member asks whether the service will be extended from Salem to his village, where is the end?

9-30 a.m. SRI V. SUBBIAH : இந்த அரித பஸ்களை விடுவதற்கு தென்னாட்டிலுள்ள மிகவும் முக்கியமான இராமேஸ்வரம் போன்ற க்ஷேத்திரத்திற்கு ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இப்போதுதான் கனம் மந்திரி அவர்கள் பதில் சொன்னார்களே.

Homœopathy, Siddha and Unani systems of medicine

* 333 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் செவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

இந்த ராஜ்யத்தில் ஹோமியோபதி, சித்த, யுனானி வைத்திய முறைகளை ஊக்குவிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஹோமியோபதியைப் பொறுத்த வரையில் இந்தக் கமிட்டியானது அறிக்கை தயாரித்து சர்க்காருக்குக் கொடுத்துவிட்டதென்றும், சர்க்கார் பரிசிலித்துக் கொண்டிருக்கிறதென்றும், அஷ்யூரன்ஸ் கமிட்டியில் கூட தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரிசிலனை எவ்வளவு காலத்திற்குள் முடியும்

a Printed as Appendix I on pages 285–286 infra.

என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை சர்க்காருக்கு அனுப்பியிருந்தும் அதை பரிசிலனை செய்ய சர்க்காருக்கு என் இவ்வளவு கால தாமதம் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்குள்ளே இன்னொரு குழுவும் ஏற்படுத்தி, அவர்களுடைய அறிக்கையையும் எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதிரி விஷயங்களில் எல்லாம் கொஞ்சம் காலதாமதம் செய்தால்தான் நன்ருக ஆராய முடியும்.

SRI K. ANBAZHAGAN : இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிற மருத்துவத் துறையிலே, சித்தவைத்திய முறையைப் படிப்பதற்கு இருக்கும் வாய்ப்பை இழந்திருக்கிறது. ஆகையால் சென்னையில் ஒரு சித்த வைத்தியக் கல்லூரியைத் தோற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சித்த வைத்திய முறை மாத்திரம் அல்ல, ஆயுர்வேதம், யுனனி முதலிய வைத்திய முறைகளும் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது.

Library cess

* 334 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் நூல் நிலையத்திற்கான செஸ் (cess) கடந்த மூன்று வருஷங்களில் ஆண்டுதோறும் எவ்வளவு வசூலாகியது?

(ஆ) ஆண்டு தோறும் இந்த இனத்தில் செலவாகிய தொகை எவ்வளவு?

(இ) இந்த ஜில்லாவில் எத்தனை நூல் நிலையங்கள் எங்கெங்கே இருக்கின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (இ) A statement [a] is laid on the table of the House.

SRI A. VEDARATHNAM : இந்த நூல் நிலையத்திற்காக வசூல் செய்யப்படுகின்ற செஸ் நிதியிலிருந்து புஸ்தகங்களை வாங்குவது மட்டுமல்லாமல் இன்னும் கட்டிடங்கள் கட்டுவதற்கும், மேஜை நாற்காலிகள் வாங்குவதற்கும் இந்த நிதியிலிருந்து செலவு செய்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டுவதற்கு சில இடங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இன்று மேஜை, நாற்காலிகள், பத்திரிகைகள் வாங்குவதற்கும் சம்பளம் கொடுப்பதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

---

a Printed as Appendix II on pages 286-291 infra.